1. **பதவி** – உதவி ஆணையாளர் (பெறுகை)
2. **வயது** - 22 வயதுக்குக் குறைவாயதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்சளவான வயதெல்லை ஏற்புடையதல்ல.
3. **தகைமை**

அ. வெளிவாரி விண்ணப்பதாரிகள்

1. வியாபார முகாமைத்துவம் / வியாபார நிருவாகம் /வணிகம் /நிதி /கணக்கியல் /வழங்கல் முகாமைத்துவம் அல்லதுஇப்பதவிக்கு ஏற்புடையதான விடயத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டம் பெற்றுக் கொண்டதன் பின்னர் பதவிக்குரிய விடயத்துறையில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

ஆ. உள்ளக விண்ணப்பதாரிகள்

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ‘‘கனிஷ்ட முகாமைத்துவ’’ (JM) சேவை வகுதியின் குறித்த துறையைச் சேர்ந்த பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

இ. ஏனையன

I. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. பதவிக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற கடமைகளை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் தேவையான உடல்சார் மற்றும் உளவியல் தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

4. **சம்பள நிலை**

நிரந்தர சம்பள அளவுத்திட்டம் - MM 1-1 2025

அடிப்படைச் சம்பளம் - ரூபா 81,710.00 (2026), ரூபா 91,690.00 (2027)

வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா: 17,800 உரித்தாகும்.
தொழில்வாண்மைக் கொடுப்பனவு ரூபா 25,000 உரித்தாகும். (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2025 இற்கமைய)

வருடாந்த சம்பளம் - 81,710.00 +17800.00 + 25,000.00 x 12 = ரூபா 1,494,120.00 (2026)

- 91,690.00 +17800.00 + 25,000.00 x 12 = ரூபா 1,613,880.00 (2027)

5. **கடமைசார் தன்மை**

i. பணியகத்தின் பெறுகைத் திட்டத்தைத் தயார் செய்தல்.
ii. வருடாந்த பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமனம் செய்துகொள்ளல்.
iii. வருடாந்த வரவு செலவுத்திட்டம் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மென்மேலும் வினைத்திறன்மிக்கவாறு பயன்படுத்தி பெறுகைத் திட்டத்திற்கமைய உரிய பெறுகை முறையியல்களைப் பின்பற்றி பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.
iv. சொத்துக்களை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.
v. கொள்வனவுகள் சம்பந்தமான பட்டியல்கள் மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை முறையாக கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக உரிய பிரிவுகளிடம் சமர்ப்பித்தல்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED